

விழுப்புரம் கணபதி நகர் கிருஷ்ணமூர்த்தி இல்ல விழாவில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு வாழ்த்தினார். விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன். தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி, நகரச் செயலாளர் இரா.சர்க்கரை உள்ளிட்ட ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர்கள் உடனிருந்தனர்.

## அண்ணாநகர்

## சி.வி.மலையன் மறைவு!


சென்னை, அக். 23 –

சென்னை மாநகராட்சியின் முன்னாள் ஆளுங்கட்சித் தலைவர் – முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் – சி.வி. மலையன் அவர்கள் (93 வயது) நேற்று முன்தினம் (21.10.2024) முதிர்வின் காரணமாக மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சி.வி.மலையன் அவர்கள் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் சூளைமேடு பகுதியில் உறுப்பி னராக கட்சியில் சேர்ந்து கழக பணியாற்றி வந்து, பிறகு சூளைமேடு வட்ட கழக செயலாளராகவும் தென் சென்னை மாவட்டத்தின் அவைத் தலைவராகவும் நீண்ட காலம் பணியாற்றி உள்ளார்.

தலைமைக் கழகத்தின் தணிக்கைகுழு உறுப்பினராகவும் இருந்துள்ளார். முதலமைச்சர் தளபதி அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்த 1996 – 2001 காலக்கட்டத்தில் சென்னை மாநகராட்சியின் ஆளுங்கட்சித் தலைவராகவும் , நியமனக்குழு உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியுள்ளார்.

அதேபோல், கடந்த 2001–2006 காலக்கட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் எதிர்கட்சித்தலைவராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்.



தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் திருவாரூர் மாவட்டத்தில் இலவச திருமணங்களை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் நடத்தி வைத்தனர். அறங்காவல் குழு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.

# திருவண்ணாமலை தெற்கு - வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்பு!

திருவண்ணாமலை, அக். 23 -

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இது குறித்து மாவட்ட திமுக அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

26.10.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழு கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலோசனைக் கூட்டத்தில், தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புயாற்றுகிறார்.

செயற்குழு கூட்டத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரியில் இந்து சமய அறநிலையத்துறை மூலம் 9 ஜோடிகளுக்கு திருமணம்!

## தே.மதியழகன் எம்.எல்.ஏ. – மாவட்ட ஆட்சியர் சரயு தலைமை!

கிருஷ்ணகிரி, அக். 23 -

கிருஷ்ணகிரி வட்டம், காட்டிநாயனப்பள்ளி ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத்துறை மூலம், திருக்கோயில் சார்பில் 9 இணைகளுக்கு திருமணத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சியர் சரயு ஆகியோர் தலைமையில் திருமணம் நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர் .

மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.50 ஆயிரம் மதிப்பில் கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட சீர்வரிசைகள் வழங்கி கடந்த இரண்டு ஆண்டுகளில்

பொருளாதாரத்தில் பின் தங்கிய 1100 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டது. தொடர்ந்து, இந்த வருடமும் 700 இணைகளுக்கு திருக்கோயில் சார்பில் ரூ.10 ஆயிரம் உயர்த்தி 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.60 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கி திருமணம் நடத்தி வைக்கப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நேற்று முன்தினம் (21.10.2024) காட்டிநாயனப்பள்ளி ஆஞ்சநேய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 9 இணைகளுக்கு திருமணம் நடத்தப்பட்டு 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.60 ஆயிரம் மதிப்பில் கட்டில், பீரோ, மெத்தை, தலையணைகள், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ஜோதி லட்சுமி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினி செல்வம், வட்டாட்சியர் பொன்னாலா, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சின்னசாமி, சின்னராசு, விஜயகுமார், கலைவாணி, மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், ஒன்றியச் செயலாளர்கள் தனசேகர், கோவிந்தன், அறிஞர், ராஜேந்திரன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்

தினேஷ் ராஜன் , ஜெயந்திரன், மகேந்திரன், லயோலா ராஜசேகர், ராமச்சந்திரன், ஆனந்தன், சுரேந்தர்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், மணமக்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மல்லாண்டியில் ரூ 14.31லட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையக் கட்டிடத்தினை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய பொருளாளர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

## நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

# துணை முதல்வராக பொறுப்பு ஏற்றுள்ள உதயநிதிஸ்டாலினுக்கு வாழ்த்து தீர்மானம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – என்.கௌதமன் சிறப்புரை!

நாகை. அக். 23-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், க. மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக வருகை தந்த நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர், பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், கழக தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ. செங்குட்டுவன், ஆர். டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எம்.பாண்டியன், எஸ். பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, கோசி.குமார், எஸ்.பி.டி.சார்லஸ், எல். எஸ்.ஈ. பழனியப்பன், இல.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் க. அட்சய லிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், சி.சுப்பரமணியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, இரா.முருகையன் அ.பாரிபாலன், க.சத்தியமூத்தி, ஆர்.துரைராஜ், இளம்சுந்தர், பால.முரளி, ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, இளம்.சுந்தர், ப.உதயக்குமார், ஆர்.ஆர்.குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், எஸ்.வி.டி.அருள், எஸ்.பால்ராஜ், எஸ்.சந்தோஷ், ஆர். சுரேந்தர், வ.கமல், எம். தினேஷ்குமார், எஸ்.பாலமுருளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமோதரன், தி.கலையரசன், ஜெ.ஆர்.கே.சுரேஷ், கு.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

வாக்களித்த மக்கள் மனமகிழ்ச்சியடையும் அளவிற்கு வாக்களிக்க மறந்தவர்களும் போற்றி பாராட்டும் அளவுக்கு இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வியந்து போற்றிகின்ற அளவுக்கு உலகின் பல்வேறு நிறுவனங்களை ஈர்க்கும் அளவுக்கு திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருபவர் நமது கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின் ஆட்சியில் திறன்மிகு துணை முதல்வராக நம் கழக இளைஞர் அணி செயலாளர், இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களை நியமித்துள்ளார்கள். நம் இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள். தெளிவான கொள்கையும் அதற்கான துணிச்சலையும் கொண்டவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள். 2019 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக கிராமபுறங்களில், கிராம சபைக் கூட்டங்கள் நடத்தி தமிழகம் முழுவதும் வலம் வந்தவர் நம் இளம்தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் எய்ம்ஸ் மருத்துவமனை, குடியுரிமைச் சட்டம், நீட்தேர்வு ரத்துக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம், அண்ணா பல்கலைகழகம் இரண்டாக பிரிக்க எதிர்ப்பு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய முறைகேடு போன்ற மக்கள் பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்த நம் இளம் தலைவர் அவர்கள் சட்டமன்ற தொகுதிக்கு 10 ஆயிரம் பேர் வீதம் கழக இளைஞர் அணிக்கு உறுப்பினர்களை சேர்ந்து 234 தொகுதிகளிலும் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்திக் காட்டிய சரித்திர இளைஞர், நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி ஆகிய மூன்று கழக சார்பு அணிகள் மூலம் போராட்டங்கள் முன்னெடுத்து தமிழக வரலாற்றில் பொறிக்கத்தக்க முத்திரை பதித்த நம் உதயநிதிஸ்டாலின் அவர்கள் சேலம் மாநகரில் சுமார் 6 லட்சம் இளைஞர்களை திரட்டி இளைஞரணி மாநில மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி காட்டிய இளம் தலைவர் அவர்களுக்கு கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில் துணை முதல்வர் பொறுப்பு வழங்கிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு துணை முதல்வராக பொறுப்பு ஏற்றுள்ள இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும் நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சராக பொறுப்பு ஏற்றுள்ள பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழிக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவக்ளின் ஆணைக்கினங்க தற்போது தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழையின் காரணமாக பாதிப்படைகின்ற மக்களுக்கு உதவிடும் வகையில் மீட்பு பணி மற்றும் நிவாரண பணிகளில் மாவட்டகழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வது என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமக்கை மகன், தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாக திகழ்ந்த அரசியல் மேதை முரசொலிமாறன் அவர்களின் இளவல், கழகத்தலைவர் தளபதி அவர்களின் தங்கை கணவரும், தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையாம் முரசொலி நாளிதழிதழை கலைஞருக்கு பக்கபலமாக 50 ஆண்டுகள் கட்டிகாத்த கழக உடன்பிறப்புகளின் செஞ்சம் நிறைந்து வாழ்கின்ற முரசொலியின் முன்னாள் ஆசிரியர் முரசொலி செல்வம் அவர்கள் மறைவுக்கு இந்த கூட்டம் தனது ஆழ்ந்த இரங்களை தெரிவித்துக் கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் அறிமுகக் கூட்டம் வாணாபுரம் பகண்டை கூட்டு சாலையில் அமைந்துள்ள சட்டமன்ற அலுவலகத்தில் மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தொகுதி பார்வையாளர் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் பாசார் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சிகளை சேர்ந்தவர்கள் கழகத்தில் இணைந்தனர். அவர்கள் அனைவருக்கும் கழக வேட்டி மற்றும் சேலை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்து கழகப் பணியில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.



தமிழ்நாடு வனத்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பில் திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 25,000 பனை விதைகள் நடவு செய்ய முடிவு செய்யப்பட்டு பெரிய குளத்திற்கு வரும் நீர்வழிப்பாதையான பெரும்பள்ளம் கரையில் சுமார் 1,500 பனைவிதைகளை பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி, திருப்பூர் வனச்சரக அலுவலர் சுரேஷ்கிருஷ்ணன்ஆகியோர் நடவு செய்து துவக்கி வைத்தனர். இதில் வனவர்கள் உமாமகேஸ்வரி, வெங்கடாசலம், வன காப்பாளர் கணபதிசெல்வம், 10வது வார்டு கவுன்சிலர் கனகசபாபதி, சாமளாபுரம் குளம் பாதுகாப்பு அறக்கட்டளை நிர்வாகி மணி (எ) ரத்தினசபாபதி, பொன்னுச்சாமி, கந்தசாமி, நடராஜன், தங்கராஜ், ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆசிரியர் வெ.கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



ஆசிரியராய்ப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணாம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**